**செய்தி வெளியீடு எண் : 222** **நாள்: 09.02.2022**

## குறளோவியம் திருக்குறள் மேசை நாட்காட்டிப் புத்தகம் விற்பனை

திருக்குறளை இளைய தலைமுறையினரிடத்தில் கொண்டு சேர்க்கும் வண்ணம், தீராக் காதல் திருக்குறள் என்ற பெயரில் தீந்தமிழ் நிகழ்ச்சிகள் நடத்தப்படும் என சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்டதையொட்டி, பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு பங்கேற்ற, குறளோவியம் என்ற தலைப்பில் மாநில அளவிலான ஓவியப் போட்டியினை தமிழ் வளர்ச்சித் துறை மற்றும் தமிழ் இணையக் கல்விக்கழகம் இணைந்து நடத்தியது.

மாநிலம் முழுவதும் இருந்து ஏறத்தாழ 12 ஆயிரம் மாணவர்கள் கலந்து கொண்ட இப்போட்டியில் திருக்குறள் கருத்தை மையப்படுத்திய சிறப்பான 365 ஓவியங்களைத் தெரிவு செய்து, திருக்குறள் மேசை நாட்காட்டிப் புத்தகத்தை தமிழ் இணையக் கல்விக்கழகம் வடிவமைத்து வெளியிட்டுள்ளது. இந்நாட்காட்டிப் புத்தகத்தை எல்லா ஆண்டுகளிலும் பயன்படுத்துவதற்கு ஏற்ற வகையில், ஆங்கில தேதி மட்டும் இடம் பெறும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதைப் பொதுமக்களும் பெற்றுக்கொள்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சுருள்கட்டுடன் வண்ணத் தாள்களில் அச்சிடப்பட்டுள்ள இம்மேசை தினசரி நாட்காட்டிப் புத்தகம் ஒன்றின் விலை ரூ. 350/- (ரூபாய் முந்நூற்று ஐம்பது மட்டும்) சேவை வரி உட்பட மற்றும் தபால் செலவு ரூ. 80/- தனி. இந்நாட்காட்டிப் புத்தகம் வேண்டுவோர் தங்களுக்குத் தேவையான எண்ணிக்கை விவரம் மற்றும் முழுமையான முகவரியுடன், அதற்கான தொகையினை வரைவோலையாக இயக்குநர், தமிழ் இணையக் கல்விக்கழகம், சென்னை என்ற (DD in Favour of The Director, Tamil Virtual Academy, Chennai) பெயரில் அனுப்ப வேண்டும். வரைவோலையின் பின்புறம் குறளோவியம் நாட்காட்டிப் புத்தகம் என்று எழுதி, தங்கள் பெயர் மற்றும் அலைபேசி எண்ணைக் கண்டிப்பாக குறிப்பிடவேண்டும். மேலும், தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் https://www.tamilvu.org/tva_cal_2022_online/ என்ற இணையதளத்தில் பதிவு செய்து, உரிய தொகையினை இணைய வழியில் செலுத்தியும் பெற்றுக் கொள்ளலாம். மேலும் நாட்காட்டிப் புத்தகம் தேவைப்படுவோர் சென்னை தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் புத்தக விற்பனை மையங்கள் செயல்படும் பள்ளிக் கல்வித் துறை வளாகம், நுங்கம்பாக்கம் மற்றும் கோட்டூர்புரம் அண்ணா நூற்றாண்டு நூலக வளாகம் மற்றும் கோட்டூர்புரத்தில் உள்ள தமிழ் இணையக் கல்விக்கழகம் (தொலைபேசி எண் 044 2220 9400) ஆகிய இடங்களில் நேரிலும் வாங்கிக்கொள்ளலாம்.

மேலும் விவரங்களுக்கு முனைவர் இரா. சிங்காரவேலன், ஆய்வு வளமையர் அவர்களை +91 86104 67558 என்ற எண்ணில் கட்செவி அஞ்சல் (Whatsapp) குறுஞ்செய்தி மூலம் தொடர்பு கொள்ளலாம்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9**